IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.
**OS.No. 78/2020**

| DEPOSITION OF WITNESS | PW.4 |
|---|---|

| NAME | புவனேஸ்வரி |
|---|---|

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 04.12.2023

**<u>1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை</u>**

1.நீதிமன்றத்திலிருந்து எனக்கு சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்தது. கோவில் எங்கள் அப்பா கட்டவில்லை என்று சம்பந்தமாக சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்தது.

2. என் தந்தை பெயர் சுப்பிரமணி. சுப்பிரமணியின் மகள் என்பதற்கு ஆதாரமாக ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்தேனா என்றால் சுப்பிரமணியின் மகள் தான் நான். அதற்கு ஆதாரமாக ஆதார் கார்டு உள்ளது. ஆதார் அட்டையை நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் நான் கொடுத்தேன்.

3. எனது அப்பா கட்டுமான தொழில் செய்வதற்கு ஆதாரமாக ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்தேனா என்றால் அவர் சிற்பி செய்வார் ஆதாரம் ஏதும் இல்லை. எனது தந்தை கட்டுமான தொழில் செய்வதற்கு கட்டுமான தொழிலாளர் சங்கம் மற்றும் நலவாரிய துறையில் உறுப்பினராக இருந்தார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது.

4. எனது தந்தை மேல்வழுதுணாங்குப்பம் கெங்கையம்மன் கோவில் கட்டினாரா என்பதற்காக தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். மேற்கண்ட கோவிலை கட்டுவதற்கு ஆதாரமாக ஏதேனும் உள்ளதா என்றால் அக்ரிமென்ட் போட்டுள்ளார். கோவில் கட்டிட வேலைக்காக தான் அக்ரிமென்ட் போட்டார் என்றால் சரிதான்.

5. ஒப்பந்த போட்ட தொகை 7 லட்சத்திற்கு மேல் எவ்வளவு என்று குறிப்பாக தெரியவில்லை. ஒப்பந்தம் செய்த போது நான் உடன் இருந்தேன் என்று சாட்சியம் அளித்தேன் என்றால் சரிதான். ஒப்பந்தம் வெள்ளை நிற தாளில் செய்துகொண்டனர். ஒப்பந்தம் போடும்போது வேலு, வேல்முருகன், ரேணு, மாயவேலு எனது தந்தை மற்றும் நான் இருந்தேன்.

6. ஒப்பந்தம் செய்தபோது நான் சாட்சியாக கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை. ஒப்பந்தம் குடியாத்தம் வட்டாட்சியரின் அலுவலகத்தில் உள்ள புளியமரம் அருகில் போடப்பட்டது. குடியாத்தம் வட்டாட்சியரின் அலுவலகத்தில் 1 புளியமரம் தான் நான் பார்த்துள்ளேன் எது என்று எனக்கு ஞாபகம் இல்லை.

7. குடியாத்தம் வட்டாட்சியரின் அலுவலகத்தில் உள்ள புளியமரம் அருகில் வெள்ளை தாளில் அங்கு வைத்து தான் ஒப்பந்தம் எழுதினார்கள். வெள்ளை தாளில் எழுதிய விவரம் எனக்கு தெரியும். அந்த வெள்ளை தாளில் எனது தந்தை சொல்ல

யாரோ எழுதினார்கள். மேல்வழுதுணாங்குப்பத்தில் உள்ள கோவிலுக்கு கோபுரம் மற்றும் சபதி வேலை செய்வதற்காக ஒப்பந்தம் போட்டார்கள்.

8.யார் எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது. கோவில் கட்டுவதற்காக ஒப்பந்தம் டைப் செய்யப்பட்டது. மீண்டும் சாட்சி எனது தந்தை எழுதினார்கள் என்று சாட்சியம் அளித்தார். எனது தந்தை நீலநிற மையால் எழுதினார். நீல நிற மையால் எழுதிய பிறகு மாயவேலுதான் முதலில் கையொப்பம் செய்தார், 2 வதாக எனது தந்தை சுப்பிரமணி கையொப்பம் செய்தார்.

9. அதன்பின்பு சாட்சி கையெழுத்து செய்தார்கள் என்றால் சரிதான். வேலு, வேல்முருகன், ரேணு ஆகியவர்கள் சாட்சியாக கையொப்பம் செய்தார்கள். எனது தந்தை இறந்து 10 ஆண்டு ஆகிவிட்டது. எனது தந்தையின் இறப்பு சான்றிதழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். எனது தந்தை இறந்த தேதி,மாதம், வருடம் ஞாபகமம் இல்லை. சுமார் 10 வருடத்திற்கு முன்பு இறந்துவிட்டார்.

10. ஒப்பந்தத்திலுள்ள கையெழுத்தும் எனது தந்தையின் கையெழுத்து என்பதற்கு ஒப்பிடுவதற்கு ஏதேனும் ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் எனது தந்தை கையெழுத்தை பார்த்தால் சொல்வேன் அவர் ஆங்கிலத்தில்தான் கையொப்பம் செய்வார்.

11. கோவில் கட்டுவதற்கு 7 லட்சத்திற்கு மேல் ஒப்பந்தம் போட்டதற்கு விலை நிர்ணயம் எப்படி செய்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. கோவில் கட்டுவதற்கு பவுண்டேன் பென்னா அல்லது பால் பாயின்ட் பென்னில் எழுதினார்களா என்றால் எந்த பேனாவால் எழுதினார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை.

12. ஒப்பந்தத்திலுள்ள சாட்சிகளை அழைத்து விசாரித்தால் தான் ஒப்பந்தத்திலுள்ள கையெழுத்து எனது தந்தை கையெழுத்தா என்று தெரியவரும் என்றால் நானே சொல்வேன் அது எனது தந்தை கையெழுத்து என்று.

13. ஆதார் அட்டையிலுள்ள முகவரியான 55/19 எ மெயின் ரோடு கள்ளுட்டை கிராமம், ஒடுகத்தூர், வேலூர் என்ற முகவரியில் எனக்கு நினைவு தெரிந்ததலிருந்து அங்குதான் வசித்து வருகிறேன் .

14.ஒப்பந்தம் போடுவதற்கு முன்பணமாக 3 லட்சம் கொடுத்தார்கள். கோவில் என்ன சர்வே எண்ணில் உள்ளது என்று எனக்கு தெரியாது. எனது தந்தை சிற்பியே கிடையாது அந்த ஒப்பந்தத்திலுள்ள கையெழுத்து எனது தந்தையின் கையெழுத்தே இல்லை என்றால் சரியல்ல.

15.அது போல் உண்மையாகவே ஒப்பந்தம் செய்திருந்தால் அதிலுள்ள சாட்சிகளை அழைத்து விசாரணை செய்தால் உண்மை தெரியவரும் என்றால் அழைத்து விசாரியுங்கள். நான் சொல்வது போல் குடியாத்தம் வட்டாட்சியர் அலுவலத்தில் புளியமரம் இருந்தது இல்லை என்றால் சரியல்ல.

16. நானும் மாயவேலும் உறவினர்கள் அல்ல. நானும் மாயவேலும் உறவினர்கள் தான் என்றாலும் வழக்குகாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எனது தந்தை கையெழுத்து என்பதற்காக ஏதேனும் ஆதாரம் எடுத்து வந்து தாக்கல் செய்தால் தான் அதை நிரூபணம் செய்யமுடியும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read
over of the deponent and acknowledged
by her/him to be correct

Sd/.M.N.Rajananhivarmasiva,
District Munsif,
Gudiyattam.